**செய்தி வெளியீடு எண் : 968** **நாள் : 19.05.2023**

# 32 திட்டப்பகுதிகளில் ரூ.1,908 கோடி மதிப்பீட்டில் 11,219 புதிய குடியிருப்புகள் கட்டும் பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் உத்தரவு

மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடமேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் வாரிய பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (19.5.2023) நடைபெற்றது.

ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் 2021–22 மற்றும் 2022– 23 நிதியாண்டிற்கு அறிவிக்கப்பட்ட 15000 புதிய குடியிருப்புகளில் முதற் கட்டமாக 32 திட்டப்பகுதிகளில் 1908 கோடி மதிப்பீட்டில் 11219 புதிய குடியிருப்புகள் கட்டும் பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும் என்றும் குடியிருப்புதாரர்களுக்கு வழங்க வேண்டிய கருணைத் தொகையை முழுமையாக வழங்கி வீடுகளை காலி செய்து குடியிருப்புகளை இடிக்கும் பணியினை துரிதப்படுத்த வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். நடப்பாண்டு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டவாறு ஏழை எளிய மக்களுக்கு 30 ஆயிரம் அடுக்குமாடி குடியிருப்புகள் வழங்கும் வகையில், தற்போது நடைபெற்று வரும் 190 திட்டப்பகுதியில் ரூபாய் 9704 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 85,184 குடியிருப்புகளின் கட்டுமான பணிகளை விரைந்து முடித்து பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும்

கட்டி முடிக்கப்பட்ட திட்டப்பகுதிகளில் காலியாக உள்ள 11,935 குடியிருப்புகளை ஏழை எளிய மக்களுக்கு விரைந்து வழங்கும் வகையில் சம்பந்தப்பட்ட திட்டப்பகுதியின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர்களுடன் கலந்து ஆலோசித்து வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். நடப்பாண்டு அறிவிக்கப்பட்டவாறு பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 1,10,000 பயனாளிகளை விரைந்து தேர்வு செய்து பணி ஆணைகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு கட்டப்படும் கட்டடங்கள் நீண்ட நாள் நிலைத்து இருக்கும் வகையில் நல்ல தரத்துடன் கட்டப்படுவதை ஒவ்வொரு நிலையிலும் பொறியாளர்களும், மூன்றாம் தரப்பு வல்லுநர் குழுக்களும் உறுதி செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா இ.ஆ.ப., வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் இ.ஆ.ப., வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திரு.மீ.தங்கவேல் இ.ஆ.ப., வாரிய செயலாளர் திருமதி துர்காமூர்த்தி, வாரிய தலைமை பொறியாளர்கள் திரு.வே.சண்முகசுந்தரம், திரு.எஸ்.சுந்தரராஜன், திரு.ச.சுந்தரமூர்த்தி, வாரிய பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in